ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.10 – நெறிந்தகருங்குழல்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.10 – நெறிந்தகருங்குழல்

‡ நெறிந்த கருங்குழல் மடவாய் ! ⋆
நின் அடியேன் விண்ணப்பம் ⋆
செறிந்த மணி முடிச் சனகன் ⋆
சிலை இறுத்து நினைக் கொணர்ந்ததறிந்து ⋆
அரசு களைகட்ட ⋆
அருந்தவத்தோன் இடை விலங்கச் ⋆
செறிந்த சிலை கொடுதவத்தைச் ⋆
சிதைத்ததும் ஓர் அடையாளம் ॥ **3.10.1** ॥

அல்லியம் பூ மலர்க் கோதாய் ! ⋆
அடி பணிந்தேன் விண்ணப்பம் ⋆
சொல்லுகேன் கேட்டருளாய் ⋆
துணை மலர்க் கண் மடமானே ! ⋆
எல்லியம் போதினி திருத்தல் ⋆
இருந்ததோர் இட வகையில் ⋆
மல்லிகை மா மாலை கொண்டு ⋆
அங்கார்த்ததும் ஓர் அடையாளம் ॥ **3.10.2** ॥

கலக்கிய மா மனத்தனளாய்க் ⋆
கைகேசி வரம் வேண்ட ⋆
மலக்கிய மா மனத்தனனாய் ⋆
மன்னவனும் மறாதொழிய ⋆
குலக் குமரா ! காடுறையப் ⋆

போ என்று விடை கொடுப்ப ⋆
இலக்குமணன் தன்னொடும் ⋆
அங்கேகியதோர் அடையாளம் ॥ **3.10.3** ॥

வார் அணிந்த முலை மடவாய் ! ⋆
வைதேவீ ! விண்ணப்பம் ⋆
தேர் அணிந்த அயோத்தியர் கோன் ⋆
பெருந்தேவீ ! கேட்டருளாய் ⋆
கூர் அணிந்த வேல் வலவன் ⋆
குகனோடும் கங்கை தன்னில் ⋆
சீர் அணிந்த தோழமை ⋆
கொண்டதும் ஓர் அடையாளம் ॥ **3.10.4** ॥

மான் அமரு மென்னோக்கி ! ⋆
வைதேவீ ! விண்ணப்பம் ⋆
கான் அமரும் கல்லதர் போய்க் ⋆
காடுறைந்த காலத்து ⋆
தேன் அமரும் பொழிற் சாரல் ⋆
சித்திர கூடத்திருப்ப ⋆
பால் மொழியாய் ! பரத நம்பி ⋆
பணிந்ததும் ஓர் அடையாளம் ॥ **3.10.5** ॥

சித்திரகூடத்திருப்பச் ⋆
சிறு காக்கை முலை தீண்ட ⋆
அத்திரமே கொண்டெறிய ⋆
அனைத்துலகும் திரிந்தோடி ⋆
வித்தகனே ! இராமாவோ ! ⋆
நின் அபயம் என்றழைப்ப ⋆

அத்திரமே அதன் கண்ணை ⋆
அறுத்ததும் ஓர் அடையாளம் ॥ **3.10.6** ॥

மின் ஒத்த நுண் இடையாய் ! ⋆
மெய் அடியேன் விண்ணப்பம் ⋆
பொன் ஒத்த மான் ஒன்று ⋆
புகுந்தினிது விளையாட ⋆
நின் அன்பின் வழி நின்று ⋆
சிலைபிடித்தெம்பிரான் ஏகப் ⋆
பின்னே அங்கிலக்குமணன் ⋆
பிரிந்ததும் ஓர் அடையாளம் ॥ **3.10.7** ॥

மைத் தகு மா மலர்க் குழலாய் ! ⋆
வைதேவீ ! விண்ணப்பம் ⋆
ஒத்த புகழ் வானரக்கோன் ⋆
உடன் இருந்து நினைத் தேட ⋆
அத்தகு சீர் அயோத்தியர் கோன் ⋆
அடையாளம் இவை மொழிந்தான் ⋆
இத்தகையால் அடையாளம் ⋆
ஈதவன் கை மோதிரமே ॥ **3.10.8** ॥

‡ திக்கு நிறை புகழாளன் ⋆
தீ வேள்விச் சென்ற நாள் ⋆
மிக்க பெரும் சபை நடுவே ⋆
வில் இறுத்தான் மோதிரம் கண்டு ⋆
ஒக்குமால் அடையாளம் ⋆
அனுமான் ! என்று ⋆

உச்சிமேல் வைத்துக் கொண்டுகந்தனளால் ⋆
மலர்க் குழலாள் சீதையுமே ॥ **3.10.9** ॥

‡ வார் ஆரும் முலை மடவாள் ⋆
வைதேவி தனைக் கண்டு ⋆
சீர் ஆரும் திறல் அனுமன் ⋆
தெரிந்துரைத்த அடையாளம் ⋆
பார் ஆரும் புகழ்ப் புதுவைப் ⋆
பட்டர்பிரான் பாடல் வல்லார் ⋆
ஏர் ஆரும் வைகுந்தத்து ⋆
இமையவரோடிருப்பாரே ॥ **3.10.10** ॥

அடிவரவு — நெறிந்த அல்லி கலக்கிய வாரணி மான் சித்திரகூடத்து மின் மைத்தகு திக்கு வாராரும் கதிர்

நெறிந்தகருங்குழல் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்